**கோமரங்கடவல பிரதேச சபை - 2023**
**-----------------------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கோமரங்கடவல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கோமரங்கடவல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டிற்காக ரூபா 53,400 மற்றும் 2023 ஆண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஆரம்ப மீதிகளிற்கு சீராக்கம் செய்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | பொருட் கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் ரூபா 317,200 பெறுமதியான 40 நீர் மாணிகளின் பெறுமானத்தை குறைத்து மற்றும் ரூபா 26,250 பெறுமதியான 30w 07 LED குமிழ்களின் பெறுமதி கூடுதலாக கணக்கிற்கு ஏடுக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீராக்கம் செய்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | பயன்படுத்தப்பட்டு மீண்டும் ஒப்படைத்திருந்த அலகொன்றின் பெறுமதி ரூபா 7,910 ஆன 88 நீரி | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மாணிகளின் பெறுமதி ரூபா 696,080 யினை கணக்கிற்கு எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | கேமரன்கடவல மற்றும் மதவச்சிய இரண்டு நீர் உத்தேச திட்டங்களிற்குரியதாக நீர் இணைப்பு வழங்கும் போது அறவிட வேண்டியதாக இருந்த ரூபா 1,786,479 ஆன மாணிக் கட்டண பெறுமதியை கணக்கிற்கு எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | விடயம் | தொகை<br><br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | காணி மற்றும் கட்டிடங்கள் | 121,412,631 | உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு | ஏதிர்காலத்தில் இந்த அனைத்து பதிவேடுகளை தயாரித்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு விடயங்களிற்கான சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இயந்திர உபகரணங்கள் | 5,471,080 | நிலையான சொத்துக்கள் பதிவேடு | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | கணனி உதிரிப்பாகங்கள் | 3,310,131 | நிலையான சொத்துக்கள் பதிவேடு. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | களஞ்சிய இருப்பு | 2,444,734 | இருப்பு கணக்கெடுப்பு அறிக்கை, களஞ்சிய பதிவேடுகள் | -மேற்படி- | -மேற்படி- |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | (i) 24 பிரிவு | சபையினால் நிர்மாணித்துள்ள பாதைகளை பொருட்பதிவேட்டில் பதிந்து அப் பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதிகார பிரதேசத்தினுள் காணப்படும் அனைத்து பாதைகள் தொடர்பான தகவல்கள் இற்றைப்படுத்தும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பாதைகளை பொருட்பதிவேட்டில் பதிந்து வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) 126 பிரிவு | சபையிற்கு வருமானம் உழைக்கக்கூடிய வகையில் துணை சட்டம் விதிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எமது அதிகார பிரதேசத்திலுள்ள வருமானம் உழைக்கக்கூடிய வழிகள் தொடர்பாக கண்டறிந்து எதிர் காலத்தில் துணை சட்டம் விதிக்க தேவையான நடவடிக்கை எடுப்படும். | பிரதேச சபை சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (iii) 134 பிரிவு | அதிகார பிரதேசத்திலுள்ள முன்னேற்ற பிரதேசங்களை திட்டவட்டமாக காலத்திற்கு காலம் இனங்கண்டு வீதவரி மற்றும் வரி விதிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எமது அதிகார பிரதேசத்திலுள்ள முன்னேற்ற பிரதேசம் ஒன்றான கோமரங்கடவல கிராம உத்தியோகத்தர் பிரிவினுள் உள்ள திட்டவட்ட நில பிரதேசம் தற்போது இனங்காணப்பட்டுள்ளது. | பிரதேச சபை சட்டப் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (iv) 159 பிரிவு | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 11,160,905 நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிரந்தர வருமான பரிசோதகர் ஒருவரின் பற்றாக்குறை காரணமாக கடந்த ஆண்டுகளில் வருமானம் திரட்டும் செயன்முறை உரியவாறு இடம்பெறவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) பிரிவு | கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றுகை அறிக்கை கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | பதில் வழங்கப்படவில்லை. | கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1989 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 554/5 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக விதி | | | |
| | (i) 193 ஆம் விதி | பாதிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் குறைநிரப்பு அங்கீகார செலவுகளுடன் ஒப்பிடுகையில் ஒவ்வொரு வருமான விடயங்கள் மற்றும் செலவின விடயங்களின் கீழ் ஏற்பட்ட பற்றாக்குறைகள்/ மிகைகள் தொடர்பான கூற்றுக்கள் விடய தெளிவுபடுத்தல்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | பிரதேச சபை நிதி மற்றும் ஒழுங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) 218 ஆம் விதி | கிரயம் ரூபா 71,084,473 ஆன காணிகள் மற்றும் கட்டிடங்களை ஆண்டிற்கு ஒரு முறை மதிப்பீடு செய்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | பிரதேச சபை நிதி மற்றும் ஒழுங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை. | | | |
| | நிதிப்பிரமாணம் 138 | அனைத்து கொடுப்பனவுகளும் உரிய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதும் 06 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 715,460 பெறுமதியான கொடுப்பனவுகள் உறுதிசெய்யப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை எதிர் காலத்தில் சரிசெய்து கொள்ள நடவடிக்கை எடுப்படும். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 02/2018 சுற்றறிக்கை | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 02/2018 சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | நீதிமன்ற அமைச்சின் செயலாளரின் இலக்கம் 04/1994 மற்றும் 1994 பெப்ரவரி 18 திகதிய சுற்றறிக்கை | ஒவ்வொறு பதவிநிலை உத்தியோகத்தரினாலும் வருடாந்தம் தமது சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்த வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வழங்கியுள்ள அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,510,982 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 225,135 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தவிசாளினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வியாபார மற்றும் குத்தகை வாடகை | 600 | 381 | 381 | - | 450 | 74 | 164 | - |
| வாடகை | 1,000 | 924 | 842 | 407 | 4,133 | 627 | 475 | 325 |
| நீர் கட்டணம் | 120 | ,1166 | 712 | 1,346 | 800 | 1,043 | 144 | 892 |
| ஏனைய வருமானம் | 200 | 329 | 149 | 330 | 638 | 1,324 | 2,252 | 150 |
| மொத்தம் | **1,920** | **2,800** | **2,084** | **2,083** | **6,021** | **3,068** | **3,035** | **1,367** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல ஆண்டுகளாக நிலவிவரும் நீர் இணைப்பு வழங்கும் போது அறவிட வேண்டிய மாணி கட்டணமான ரூபா 17,864,790 மற்றும் நிலுவை நீர் கட்டணமாக ரூபா 1,346,234 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிலுவை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையினால் அதிகார பிரதேசத்தில் செலுத்தப்பட்டுவரும் முச்சக்கர வண்டிகளை ஒழுங்குபடுத்துவதற்காக துனைவிதிகளை தயாரித்து அதன் மீது பெற்றுக்கொள்ள வேண்டிய கட்டணம் தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | அதிகார எல்லையினுள் காணப்படும் வருமான மூலங்களை ஒழுங்குபடுத்த வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்ற துணை விதிகளை விதிக்க வேண்டியிருந்த போதும் 2023 திசெம்பர் | அதிகார பிரதேசத்திற்கு பொருத்தமான துணை விதிகளை விதித்து செயற்படுத்துவது | முறையாக துணை விதிகள் விதிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 31 திகதியளவிலும் துணை விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பிரதேச சபையொன்றின் கடமைகளிற்கிடையில் பிரதான கடமையாக அதிகார பிரதேசத்தில் மேற்கொள்ளும் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ள வேண்டிய போதும், 2020 ஆண்டிற்காக 03 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் எதிர்வரும் ஆண்டிற்காக விண்ணப்பம் எதுவும் கிடைத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும். | காணி அபிவிருத்தி செய்ற்பாடுகளை ஒழுங்குபடுத்த வேண்டும். |
| (இ) | சபைக்குரியதான திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக உரிய திட்டமொன்று இருக்காததுடன் சபை அதிகார பிரதேசத்தில் திரட்டப்படும் கழிவுகள் வேறாக்கப்படாது திரட்டி அக்கழிவுகள் வனசீவராசிகள் வலயமொன்றான கிபுள்மெடியாவ, கோமரங்கடவல ஆகிய இடங்களில் கொட்டப்படுகின்றது. | எதிர்காலத்தில் திட்டமொன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக ஒழுங்கான திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்த வேண்டும். |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 3.9.1 கொண்ட பெறுகை வழிகாட்டி கோவையின் பிரகாரம் நிர்மாண சங்கங்களின் நிதி நிலைமை தொடர்பாக பெறுகைகள் குழுவினால் பரீட்சித்துப் பார்த்து தெரிவு செய்ய வேண்டிய போதும் அவ்வாறு பரீட்சிக்காது நிர்மாண நடவடிக்கைகளிற்காக சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் உரியவாறு பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | கருத்திட்ட கண்காணிப்பு மற்றும் திட்டமிடலை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | பெறுகை நடவடிக்கைகள் 10 சந்தர்ப்பங்களில் ரூபா 952,875 நிதிப் பெறுமதிக்காக சபையினால் பெறுகை வழிகாட்டிக்கு இணங்க மேற்கொண்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகார ஊழியர் எண்ணிக்கை மற்றும் உள்ளவாறு காணப்படும் ஊழியர் எண்ணிக்கையை கவனத்திற் கொள்ளும் போது 05 பதவிகளில் 10 வெற்றிடங்கள் காணப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டது. | இந்த ஊழியர் வெற்றிடங்கள் தொடர்பாக குறித்த அதிகாரிகளிற்கு அவ்வப்போது கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் இது வரை அதற்கு நியாயமான தீர்வொன்று கிடைக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களி பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண திறைசேரி PT/18/2022 கொண்ட 2022 திசெம்பர் 15 திகதிய சுற்றறிக்கை பிரகாரம் மற்றும் 1988 பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக விதி இலக்கம் 168 பிரகாரம் கடந்த ஆண்டிற்குரிய கணக்கு மொழிப்பின் விபரங்கள் மற்றும் கொடுப்பனவு வவுசர்கள் மற்றும் வகைப்படுத்தல் கூற்றுகளுடன் ஒவ்வொறு ஆண்டின் கணக்குகளையும் அடுத்த ஆண்டு பெப்ரவரி 28 திகதியிற்கு முன்னர் அதிகாரியினால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டின் கணக்குகள் 2024 ஏப்ரல் 22 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | உரிய திகதியில் கணக்குகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதும் நிலவும் ஊழியர் வெற்றிடங்களின் பிரகாரம் ஒரு அலுவலரை நிரந்தரமாக அக் கடமைக்காக விடுவிக்க இயலாததன் காரணமாக உள்ளக கணக்காய்வுகளை செயற்படுத்தும் குறைபாடுகள் காணப்பட்டன. | உள்ளக கணக்காய்வை சுயாதீனமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளக கணக்காய்வை முறையாக்க வேண்டும். |

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரித்திருந்த பாதீட்டு ஆவணங்களின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகளை உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கச் செய்கையில் 06 வருமான விடயங்களில் 0.7 முதல் 61 சதவீதம் வரையும் 04 செலவின விடயங்களில் 26 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையும் விலகல்கள் நிலவின. | உரிய கட்டுப்பாட்டுடன் நடவடிக்கை எடுப்படும். | பாதீட்டை நடைமுறை சாத்தியமாக தயாரிக்க வேண்டும். |

**4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்திலுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் மற்றும் குறிகாட்டி 05 பிரமாணங்களை இனங்கண்டிருந்ததுடன் அவற்றில் 03 பிரமாணங்கள் இயக்க செயற்பாட்டுடன் காணப்பட்டன. அந்த இலக்குகளின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்ய பிரதான செயலாற்றுகை குறிகாட்டி (KPI) மற்றும் அவற்றின் உண்மையான செயற்பாட்டினை அறிக்கை இட்டிருக்கவில்லை. | பிரதேச சபை மட்டத்தில் செயற்படுத்த முடியுமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அந்த இலக்கு மையப்படுத்தபட்ட நோக்கங்களை அடைந்து கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறித்த பிரமாணங்களை தீர்மானித்து அவற்றை ஆவணப்படுத்த வேண்டும். அதன் பிரகாரம் செயலாற்றுகையை அறிக்கையிட வேண்டும். |